சென்னை–6, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொஅஈ) பொ
அவர்களின் செயல்முறை ஆணை
முன்னிலை : மரு.ஜெ.ராஜமூர்த்தி, M.B.B.S., D.C.H.,

ந.க.எண்: 11706/தொஅஈ/அந/1/2019 நாள்: 09.12.2022.

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி.ர.சிவகிருபை த/பெ.(அமரர்) திரு.அ.ரகுநாதன், அலுவலக கண்காணிப்பாளர், தொஅஈ மருந்தகம்–2, பெரம்பூர் – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை – ஆணை வழங்கல் – தொடர்பாக.

பார்வை: 1. இவ்வியக்கக பணி நியமன ஆணை ந.க.எண்:11706/தொஅஈ/அந/1/2019, நாள்: 12.03.2020.

2. அரசாணை (நிலை) எண்:18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ, 1) துறை, நாள்:23.01.2020 .

*******

சென்னை மண்டலம், பெரம்பூர் தொ.அ.ஈ மருந்தகம் 2–ல் அலுவலக கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து பணியில் இருக்கும் போதே 29.11.2016 அன்று காலமான திரு.அ.ரகுநாதன் என்பாரது தற்காலிகப் பணி இளநிலை உதவியாளர் பதவியில் 12.05.1993 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, 17.06.1995 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். இறந்த அரசு ஊழியர் திரு.அ.ரகுநாதன், அலுவலக கண்காணிப்பாளர் என்பவரின் பிறந்த தேதி : 21.01.1960 என்பதால் இவரது ஓய்வு பெறும் நாள்.31.01.2018 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மகள் செல்வி.ர.சிவகிருபை என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி, உரிய கால கெடுவுக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள, அதன் தொடர்புடைய அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016) –ன் படி, பணியிடையே 29.11.2016 அன்று, இயற்கை எய்திய திரு.அ.ரகுநாதன் என்பாரின் மகளும் வாரிசுதாரருமாகிய செல்வி.ர.சிவகிருபை (பிறந்த தேதி: 09.11.2000) தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level–8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்(தொஅஈ) இயக்ககத்தில் 13.03.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.